# கேதாரகௌரி நோன்புக் கதை



151

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கடவுள் துணை

# கேதார கௌரி நோன்புக் கதை

## விநாயகர் துதி

சீர்மலி வேணியிற் றிகழும் வெண்மதி
தார்மலி கொன்றையுந் தாங்கி னானருள்
ஏர்மலி மும்மத மிசைக யானனக்
கார்மலி யைங்கரன் கழலை யுன்னுவாம்.

## நடராஜர்

வடராஜ பன்னகத்திற் றுயில்கூறுந்
திருமாலும் வாசமிக்கப்
படராஜ னக்கமலப் புத்தேளும்
பதஞ்சலியும் பாச பந்தக்
தொடராச கலும்புலியோ டேனையருந்
தொழுதேத்தச் சொன்னமன்றி
னடராஜபதியான விறைவன்றன்
சேவடியை நணுகிவாழ்வாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவகாமியம்மை

மையேந்துந் திருமிடற்றெம்மான்
முடியிற்றி கழரவை மதியை
மற்றைக் கையேந்து மெழின்
மானைச் சிறுதுடியைக்கதித்
துயர்ந்த கவினாரல்குற் பையேந்துந்
தடத்தாலும் வின்னுதல்வாள்
விழியாலும் பரனுங்காணாப்
பொய்யேந்து மிடையாலும் வென்ற
சிவகாமவல்லி பொற்றாள் போற்றி

## தெட்சணாமூர்த்தி

முருந்து போலொளிர் நகைபயில்
மூகையை முன்னந்
திருந்து வாசகம் பேசுமா
செய்த தேசிகர்க்குக்
குருந்த மெய்தி நல்லசைவறு
நிலையினைக் கூறி
யிருந்த நாயகனிணையடி
யேந்தி வாழ்த்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகக்கடவுள்

கரியபுனற் கடற்சுருங்கச் செய்ய
புனற் கடற் பெருகக் கன
மூலாவும் பெரியமலை விழுந்தழுதக்
குணபமலை யெழுந்துயரப்
பிறங்குவானோ ருரியநகர் வாழ்வுற
மற்றவுணநகர் தாழ்வுறவே
லொருகை தொட்ட வரிய புகழொரு
முருகனிரு சரணமுப்
பொழுது மடுத்து வாழ்வாம்

## பத்திரகாளியம்மை

சீர்பூத்த வுலகமெலா முய்யநடஞ்
செயு மிறைவன் தேவியான
வார்பூத்த முலைப்பிடியின் விழியுதித்துக்
தக்கனிடு மகம் பாழ்செய்து
கூர்பூத்த நெடுங்கோட்டு மகிடவனைத்
தாரகனைக்கு மைத்துப்பத்த
ரேர்பூத்த மனந்திகழ் பத்திரகாளியம்மை
பதமிறைஞ்சுவாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்குமி

முன்னகமெடுத்து வான் முகிலைக் காத்தவப்
பன்னகச் சேக்கையான் பரியுந் தேவியா
மன்ன மென்னடையுடை யணங்கின் சேவடி
யென்னகப்போதில் வைத்தினி திறைஞ்சுவாம்.

## சரஸ்வதி

பன்னருமுலகெலாம் படைத்த பங்கய
னின்னுயிர்த் தேவியாயியைந்து பல்லுயிர்
துன்னு நாமிசை தோறுந் துலங்கு வாணிதன்
மன்னிய சேவடி வணங்கி வாழ்த்துவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

காராணய கூந்தற் கவுரியியற்றியகே
தாரவிரதகதை யான்படிக்கச் - சீருலகும்
ஐந் துகரத்தந்தி முகத் தண்ணலடியர்க்கருளும்
கந்தமலர்ச் செஞ்சரணே காப்பு.

ஸ்ரீ சூதபுராணிகர் நைமிசாரண்ய வாசிகளாகிய சௌநகாதி மஹாரிஷிகளை நோக்கி அடியிற்கண்ட விதம் சொல்லத் தொடங்கினார். ஓ இருஷி சிரேஷ்டர்களே! உங்களுக்கு அனேக புராணேதிகாச கதைகள் சொன்னேன் இன்னுமொரு கதை சொல்கிறேன் கேளுங்கள். இந்த சராசர ரத்மகமான பிரபஞ்சகாத்தாவாகிய அந்த உமா மகேஸ்வரரைக் குறித்து நமஸ்கரித்து சகல கல்யாண குணங்களுக்கும் காரணப் பூதமாகிய கேதார விரத மகத்துவத்தை எடுத்துச் சொல்கின்றேன் கேளுங்கள்.

உலகத்தில் மனுஷ்ய கோடிகளுக்கு சகலமான ஐஸ்வரியத்தை கொடுக்கக்கூடியதும் அதன் மூலமாய் இகபர சுகங்களை அடையக்கூடியதுமான லோகமாதா வாகிய உமைப்பார்வதியால் அனுஷ்டித்துச் செய்து சங்கர தேகார்த்தவெனும் பரம சிவானுக்கிரகத்தால் அர்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரீஸ்வரி என்று பேர் பெற்றதான கேதாரீஸ்வர விரத மென ஒன்றுண்டு.

இவ்விரதத்தை (21) இருபத்தொரு தடவை செய்யும் புண்ணியவான்களுக்கு இம்மையில் ஐஸ்வரிய சுகமடைந்து மறுமையில் சிவசாயுஜ்யம் அடைவார்கள் என்பது திண்ணம். ஆகையால் இதை பிராமணாதி நான்கு வர்ணத்தவர்களும் செய்யலாம்,

''ஹோ முனிவர்களே'' இப்பூலோகத்தில் ஈசான்யப்பாகத்தில் மின்னர்க்கொடிக் கூட்டங்களால் நிறைந்ததும் சரத்கால மேகங்களுக்கொப்பாகியதும் அனேக நவரத்ன மணிமயமான கோபுர சிகரங்களாலும் பலவித உத்யான வனங்களாலும், அதில் புஸ்பலாதி விசேகளாலும் பசுபக்ஷிமிருகாதிகளாலும் மலையருவிகளாலும் சூழப்பட்டும் தேவதா விருக்ஷங்களாலும் மணமுள்ள புஷ்பச் செடிகளாலும் கூடிப் பிரகாசிக்கின்ற உத்யான ,வனங்களின் மத்தியில் விளங்கா நின்றும். ஸர்வ பிராணிகளாலும் சேவித்து புகழ்ந்து பேசும்படியான மிக மங்களப்தமானகைலை என்று விளங்கும் ஒரு பர்வத சிரேஷ்டம் ஒன்றுண்டு.

அதில் மஹான்களும், யோகிகளும், சித்தர். கின்னரர், கிம்புருஷர், தேவர், காந்தவர்களால் சேவிக்கும்படியான இப்பர்வத சிகரத்தில், சற்குண ஐஸ்வரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பன்னரான ஜகத் கர்த்தாவாகிய பரமேஸ்வரர் உமா சமேதரராய் பரமத்த கணங்களாலும் இன்னும் இந்திராதி தேவர்களாலும் இருஷி முனிக் கூட்டங்களாலும் சூழப் பட்டு விழங்கும்படியான காலத்தில் பஞ்ச பூதங்களா லும் சூரியாதி நவக்கிரகங்களாலும் நக்ஷத்திர ராசிகளா லும் வசிட்டாதி மஹரிஷிகளாலும் ப்ராம்ஹி முதலிய ஸப்தமாதர்களாலும் கணபதியும், தேவசேனாதிபதியும் அரம்பை முதலிய தேவஸ்திரீகளும் சிவசாயுஜ்யமடைந்தி ருக்கும் அநேக தேவருஷி கூட்டங்களாலும் சேவித்து பணிவிடை செய்கிறவர்களின் பத்தியில் பவானி சமேத ராய் எழுந்தருளியிருக்கும்படியான பரமசிவன். தன்பக்த கோடிகள் சுலபமாய் தங்களை தரிசிக்கும் பொருட்டு ஒரு தேவசபை ஏற்படுத்தி சிவபெருமான் உத்தரவின் படி நாரதாதி தேவர்களால் ம னாக்கியமாய் தேவவாத் திய விசேஷங்களால் கானம் நடத்தும் போது, கிருதாசி மேனகை முதலியோர்கள் வீணாதி தாள விசேசங்களு டன் நான்குவித வாத்தியங்களோடும் நாட்டியம் செய் தார்கள்.

அப்போது நடன ஸ்திரீகத்தின் மிக சௌதர்ரிய முள்ளவளாகிய, எல்லோருடைய மனதைக் கவரக்கூடிய ரம்பையானவள் அனேகமான நாட்டிய விசேஷங்களை நடித்துக் காட்டினாள் உடனே அந்தரங்கப் பக்தராகிய பிருங்கி மஹரிஷி சிவ சன்னிதானத்தில் பக்தியோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூசித்திரமான விகட நாட்டியம் செய்தார். அப்போது பரமசிவனுடைய இடப் பாகத்தில், பார்வதியும் எழுந் தருளியிருந்தாள். எல்லா தேவர்களும் அந்த பிருங்கி யால் செய்யப்பட்ட நாட்டியங்களுக்கு மிக சந்தோஷித்து நகைத்து மிக ஆச்சரியம் அடைந்தார்கள். அந்த ஆனந்தமயமான சிரிப்பினால் பர்வத குகைகள் நிறைந்து விசேசமான கலகல தொணி உண்டாக்கியது அப்போது பரமசிவத்திற்கு உண்டான மனக்களிப்பால் அச்சிவ பக்தனாகிய பிருங்கியைப் பார்த்து, உன்னால் நடத்திய நாட்டிய விசேசத்தால் எனக்கு மிக சந்தோஷமுண்டா கிறதென்று பரமசிவன் சொல்லி, அந்தப் பக்தரிடம் மிகக் கிருபை உண்டாக்கி அனுக்கிரகம் செய்தார் அப் போது சபையிலுள்ள கவிபுத்தான் முதலியவர்கள் அவரை மிக கௌரவப்படுத்தினார்கள். அம்மஹறிசி மிக பக்தி யோடு அதிவணக்கத்துடன் சந்தோஷமாய் பார்வதியை நீக்கி பரமசிவத்திற்கு மாத்திரம் வலம் சுத்திவந்து நமஸ் காரம் செய்தார். உடனே மிக பூஜ்யையான பார்வதிதேவி புன்சிரிப்போடு தன் பர்த்தாவாகிய பரமசிவத்தை [கண் ணோக்கி, பார்த்து ஓ சுவாமி! இந்தப் பக்தன் என்னை விட்டுத் தங்களுக்கு மட்டும் நமஸ்கரித்தானே; அதற்கு என்ன காரணமோ? அந்த ஆச்சரியமான விஷயத்தை எனக்கு விவரித்துச் சொல்ல வேண்டும் என்று கேட்க

சந்திரசூடா ''ஓபிரியே! சொல்லுகிறேன் கேள் சிவயோகியாகிய பரமார்த்தா பேக்ஷயை கோரினவனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையால் உன்னால் எவ்விதமான பிரயோஜனமும் கிடை யாதென்கின்ற நிச்சயமனதுடன் என்னை மாத்திரம் நமஸ்கரித்தான்.'' என்று பரமசிவன் சொல்ல உடனே பரமேஸ்வரி மிக வருத்தப்பட்டு தன் பர்த்தா விடத்தில் கோபங்கொண்டு, தமது சக்தியின் கூறு பிருங்கி இருஷி யினின்றும் அகலக்கடவது எனச் சொல்ல, அவர் உதிரம் பிளிந்த சக்கை போன்ற உடல் உடையவராய் பாலையில் அகப்பட்ட இலை போன்று தள்ளாடினார். இதனைக் கண்டு கருணை கொண்ட கைலைவாசன் அவ் இருஷியின் கையில் தண்டொன்று வரச்செய்ய அவர் அதனை உதவி யால் ஊன்றிக் கொண்டே தமது ஆச்சிரமம் போய்ச் சேர்ந்தார். நம்மை இவ்விதம் இகழ்ந்து நின்ற பிருங்கி மகரிசிக்கு பெருமான் கோலுங் கொடுத்தனுப்பியதைக் கண்ட உமாதேவியார், மிக்க சினங்கொண்டு கைலையை விட்டகன்று; அருந்தவஞ் செய்யக் கருதி, பூலோகத்திற்கு எழுந்தருளி வால்மீக மகரிசி சஞ்சரிக்கின்ற பூங்காவனத் தில் ஓர் விருச்சத்தினடியில் அமர்ந்திருந்தார். அந்தத்திக் கில் பன்னிரண்டு வருஷம் மழையில்லாமல் இருந்த விருச் சங்கள் எல்லாம் துளிர்த்து, தளைத்து, புஷ்பித்து காய்த்து பழுத்து, இன்னும் அனேக பூஞ்செடிகள் எல்லாம் மல் லிகை, முல்லை, கொங்கு, இருவாச்சி, மந்தாரை, பாரி ஜாதம், சண்பகம், சிறு மல்லிகை, புன்னை, பாதிரி வில்வம், பத்திரி, துளபம், மற்றும் உண்டான சகல ஜாதி புஷ்பங்களும் புஷ்பித்து பரிமளித்து சுத்தி நாலு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசனை விஸ்தீரணம் பரிமளம் வீசினது அச்சமயத்தில் வால்மீக மகரிசி தம்முடை பூங்காவனத்தைப் பார்த்து அதிசயித்து பன்னிரண்டு வருஷம் மழையில்லாமல் உலர்ந் திருக்கின்ற விருட்சங்கள் எல்லாம் இப்பொழுது ஆச்சரிய மாய்த் துளிர்த்து, புஷ்பித்து, காய்த்துப் பழுத்திருக்கின்ற ஆச்சரியம் என்னவோ தெரியவில்லை. என்று மனதில் நினைத்துக் கொண்டு பூங்காவனத்திற்கு வந்தார வந்த வுடன் சகல புவன கர்த்தாவாகிய பரமேஸ்வரர் பர மேஸ்வரி பிரம்மா விஷ்ணு வந்திருக்கிறார்களோ அவர் களைக் காண வேண்டுமென்று அந்த வனமெல்லாம் தேடி ஆராய்ந்து பார்க்குமிடத்தில் ஸ்ரீ பார்வதா தேவி அம்மன் ஒரு வில்வ விருட்சத்தின் அடியில் எழுந்தருளி இருக்கிறதைக் கண்டு மூவருக்கு முதன்மையான தாயே முப்பது முக்கோடி தேவர்களுக்கும் நாற்பத்தொண்ணா யிரம் ரிசிகளுக்கும் ஒரு தெய்வமாய் நின்ற பராசக்தி யான ஈஸ்வரியே! நான் எத்தனை கோடி தவம் செய் தேனோ, இந்த பூங்காவனத்தில் எனக்கு காட்சி கொடுக்கத்தக்கதாக கைலாயத்தைவிட்டு இந்தப் பூலோ கத்திற்கு நீர் எழுந்தருளின என்னவென்று எமக்கு திரு வாய் மலர்ந்தருள வேண்டுமென்று வால்மீக மகரிஷி கேட்க அப்பொழுது இமாசல குமாரியாகிய பார்வதியம் மன் திருவாய் மலர்ந்து சொல்கின்றார்.

கேளும் வால்மீக மகரிசியே! ஸ்ரீ கைலாயத்தில் பர மேஸ்வரரும், நாமும் ஒரு நவரெத்தினச் சிம்மாசனத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீற்றிருக்கையில் பிரம்மா, விஷ்ணு, தேவேந்திரன் முதலான தேவர்களும் மற்றும் உண்டான மகரிசிகளும் வந்து இருவரையும் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துப் போவார்கள் ஒருநாள் பிருங்கி மகரிசி வந்து பரமேஸ்வரரை மாத்திரம் நமஸ்கரித்து நம்மை புறம்பாக தள்ளினான் அப்பொழுது நம்மை இவனோ புறம்பாக தள்ளுகிறவன் என்று மகா கோபத்துடன் நம்முடைய கூறான இரத்தமாங்கிசத்தை வாங்கிக் கொண்டேன். அப்பொழுது பரமேஸ்வரர் அவனுக்கு உபேட்சை செய்து ஒரு தெண்டு கொடுத்தார். இப்படிச் செய்யலாமா என்று கேட்டதற்கு அவர் மறுமொழி சொல்லவில்லை ஆகையால் நமக்கு கோபம் பிறந்தது.

பூலோகத்திற்கு வருகிறபொழுது இந்தப் பூங்காவனத்தைக் கண்டு இங்கே இருந்தோமென்று பார்வதி அம்மன் வால்மீக மகரிசிக்கு சொல்ல அந்த மகரிசியும் தாயே நீங்கள் என்னுடைய ஆச்சிரமத்திற்கு எழுந்தருளி வரவேண்டுமென்று நமஸ்கரித்தார். அப்படியே நல்லதென்று பரமேஸ்வரியும் வால்மீக மகரிசியுடைய ஆச்சிரமத்திற்குவர, ரிசியானவர் |பார்வதி தேவியாருக்கு ஒரு ஆச்சிரமமும், ஒரு நவரெத்தின சிம்மாசனமும் உண்டு பண்ணி அந்த நவரெத்தின சிம்மாசனத்தின்மீது அமரும்படி பரமேஸ்வரியை வேண்ட பரமேஸ்வரி மகரிசியைப் பார்த்து ஓ மகரிசியே, இந்தப் பூலோகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஒரு விரதம் அனுஷ்டிக்க வேண்டும். மேலான விரதம் ஒன்று இருக்குமானால் அதை எனக்கு நீர் சொல்ல வேண்டுமென்று கேட்க, வான்மீகமகரிசிதொழுது தோத்தரித்து என் தாயே. லோக மாதாவே அபிராமித் தாயே, திரிபுரசம்மாரி, சிவகாமி, கௌரி கைலாசவாசகி விபூதி ருத்திராட்சி' கிருபாநந்தி வேதஸ் சொரூபி, உம்முடைய பாதத்திற்கு அடிமையாகிய அடியேன் ஒரு விண்ணப்பம் சொல்கிறேன்.

கோபமில்லாமல் கேட்டு திருவுளம் செய்ய வேண்டு மென்று கேட்க அது என்னவென்று ஈஸ்வரி கேட்க கேளாய் ஈஸ்வரியே! இந்தப் பூலோகத்தில் ஒருவருக்கும் தெரியப்படாத ஒரு விரதம் உண்டு. அவ்விரதத்திற்கு கேதார ஈஸ்வரி நோன்பென்று பெயர்,

அதை இது வரையில் யாரும், அனுஷ்டிக்கவில்லை நீர் அந்த விரதத்தை அனுட்டித்தால் இஷ்ட சித்தி யாகும் என்று சொன்னார். அதை பரமேஸ்வரி கேட்டு அந்த விரதம் எக்காலத்தில் எவ்விதமாக அனுஷ்டிக்கின் றது எனக்கு நன்றாய் நீர் தெரியப்படச் சொல்ல வேண்டு மென்று கேட்க வால்மீக மகரிசி சொல்லுகிறார்.

புரட்டாதி மாதச் சுக்கில பட்ச தசமி தொடங்கி ஐப்பசி மாதம் கிருஷ்ண பட்சம் தீபாவளி அமாவாசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைக்கும் இருபத்தொரு நாள் பிரதி தினம் ஸ்நானம் செய்து பரிசுத்த வஸ்திரம் தரித்துக் கொண்டு ஆல விருச்சத்தினடியில் மணலினால் சிவலிங்கம் பிடித்து வைத்து ஈஸ்வரராகப் பாவித்து, அபிசேகம் செய்து வீபூதி சந்தணாட்சதை, புஷ்பம் சாத்தி, தூப தீப நைவேத்தியம் செய்து ஒரு வெல்ல உருண்டை, ஒரு சந்தண உருண்டை, ஒரு மஞ்சளுருண்டை, ஒரு அதிரசம், ஒரு வாழைப்பழம், ஒரு தேங்காய், ஒரு பாக்கு ஒரு வெற்றிலை இவைகளையெல்லாம் நேமகமாய் வைத்து நைவேத்தியம் செய்து தூபதீபங் கொடுத்து சுகந்த வில்வார்ச்சனை அர்ச்சித்து நமஸ்காரம் செய்து அதன் பின் ஒரு கயிறு இருபத்தோர் இழை முறுக்கி அதை தினம் தினமும் ஒரு முடியாக இருபத்தொரு முடி முடித்து தினமும் உபவாசமாக இருந்து நைவேத்தியம் செய்த அதிரசத்தைப் புசித்து இந்தப் படிக்கு இருபத்தொரு நாளும் கிரமமாக இந்த விரதத்தை அனுஷ்டித்தால் இருபத்தோராம் நாள் தீபாவளி அமாவாசை அன்றைக்கு பரமேஸ்வரர் ரிஷபவாகன ரூடராய் எழுந்தருளி வந்து காட்சி கொடுத்து நீர் கேட்ட வரத்தைக் கொடுப்பார் என்றும் வால்மீகி மகரிஷி சொன்னார்.

அதைக்கேட்டு பரமேஸ்வரி சந்தோஷப்பட்டு பிறகு வால்மீகியானவர் ஈஸ்வரி கையினால் சகல சாமான்களும் தருவிப்பது ஐப்பசி மாதத்திலே சுக்கில பட்ச தசமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கி அபரபட்ச சதுர்த்தசி அமாவாசை வரைக்கும் இருபத்தொரு நாளும் தினமும் ஸ்நானம் செய்து பரிசுத்த வஸ்திரம் தரித்துக் கொள்ளச் சொல்லி ஆல விருட்சத்தின் கீழே மணலினாலே சிவலிங்கம் பிடித்து வைத்து ஈஸ்வரராகப் பாவித்து அபிசேகம் செய்து சந்தனாட்சதை புஷ்பஞ்சாத்தி தூபதீபம் பரிமாறி நைவேத்தியம் செய்து ஒருவெல்லவுருண்டை ஒருசந்தணவுருண்டை ஒரு மஞ்சளுருண்டை ஒரு அதிரசம் ஒரு பழம் ஒரு பாக்கு ஒரு வெற்றிலை இவைகளையெல்லாம் நேமமாக வைத்து நைவேத்தியம் செய்து தூப தீபங் கொடுத்து சுகந்த வில்வார்ச்சனை செய்து நமஸ்காரம் செய்வித்து இருபத்தொருயிழையிலே ஒரு நூலும் வைத்து அதிலே ஒரு முடிமுடிந்து சுவைத்து பிற்பாடு நேகமத்தோடே அந்த நைவேத்தியத்தைச் சாப்பிடச் சொல்லி இப்படி ஈஸ்வரியாள் கையினாலே இருபத்தொரு நாள் பூசை செய்வித்து இருபத்தொரு பழம் இருபத்தொரு அதிரசம் இருபத்தொரு வெல்லவுருண்டை இருபத்தொரு சந்தணவுருண்டை இருபத்தொரு மஞ்சளுருண்டையும் நைவேத்தியஞ் செய்து தூப தீபங் கொடுத்து இருபத்தொருயிழையிலே தோறணித்து இருபத்தொரு முடிமுடித்து தரித்துக் கொண்டு அர்ச்சனை செய்து ஈஸ்வரி நமஸ்காரஞ் செய்து தோத்தரிக்கும் போது கைலாயத்திலிருந்து பரமேஸ்வரர் ரிஷப வாகனத்தின் பேரிலே பிரம்மா, விஷ்ணு தேவேந்திரன் முதலான தேவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிஷிகள் சூழத்தக்கதாகப் பார்வதா தேவிக்கு முன்பாக வந்து ஓய் பராசக்தி உமக்கென்ன வேண்டுமென்று கேட்க உம்மிட சரீரத்திலே அர்த்த சரீரம் வேண்டு மென்று கேட்க அப்படியே அர்த்த நாரீஸ்வரராய் காட்சி கொடுத்து இன்று முதல் இந்த விரதத்தை யாதா மொருவர் அனுஷ்டித்தாலும் அவர்களுக்கு வேண்டிய பாக்கியத்தைக் கொடுப்போமென்று சொல்லி கைலாயத் திற்கு எழுந்தருளினார்.

அவ்வித விசேடமான கேதாரி விரதத்தை தேவ தாஸ்திரிகள் முதலானோரும் அநுஷ்டித்து வேண்டிய வரங்களைப் பெற்றார்கள். இப்படி நடந்து வருகின்ற நாளிலே பூலோகத்து மானிடர்களுக்கு தெரிவிக்கும் பொருட்டு தெய்வ லோகத்திலிருந்து தெய்வ கன்னி யர்கள் பூலோகத்திற்கு வந்து ஒரு கெங்கைக் கரையிலே ஆலவிருச்சத்தின் கீழே அந்த இருபத்தொரு நாளும் அப்படியே னோற்பது வெகு அருமையென்று ஓரே தர மாய் ஐப்பசி மாதம் அபரபட்சத்து சதுர்த்தசியில் அந்த தெய்வகன்னியர்கள் மணலினால் லிங்காகாரமாய் உண் டாக்கி வைத்து இருபத்தொருதரம் பூசை செய்து இரு பத்தொரு பழம், இருபத்தொரு அதிரசம், இருபத் தொரு வெல்லவுருண்டை, இருபத்தொரு சந்தண வுருண்டை, இருபத்தொரு மஞ்சளுருண்டை இருபத் தொரு இளையிலே கயிறு அதிலே இருபத்தொரு முடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்து வைத்து நைவேத்திய தூபதீபங் கொடுத்து, நல்ல சுகந்த புஷ்பங்கள் வில்வங்களாலே அர்ச்சனை செய்து வருகின்றனர்.

அவ்வேளையில் ஒரு ராசாவுக்கு இரண்டு பெண் களுண்டு. புண்ணியவதி, பாக்கியவதி என்னும் பெயரை யுடைத்தானவர்கள். அந்தப் பெண்கள் தகப்பனார் மிக வும் தரித்திரர். இப்படியிருக்கும் அந்தப் பெண்களுக்கு கல்யாணமுமில்லை. அந்த இரண்டு பெண்களும் அன் றைக்கு கெங்கைக் கரைக்கு வந்தார்கள் அங்கே தெய்வ கன்னியர்கள் நோன்பு நோக்கிறதைப் பார்த்து அம்மா நீங்கள் யார் இவ்விடத்தில் என்ன செய்கிறீர்ளென்று கேட்க அப்படிக்கேட்ட பெண்களை தெய்வ கன்னியர்கள் பார்த்து விருத்தாந்தத்தைக் கேட்டு ஓ பெண்களே நாங் கள் தெய்வ கன்னியர்கள் பூர்வத்திலே இந்த நோன்பை பரமேஸ்வரி நோற்று ஈஸவரர் இடப்பாகம் பெற்றாள். இது கேதார ஈஸ்வர விரதம், இந்த நோன்பு நோக் கிறவர்களுக்கு நினைத்த காரியம் கைகூடுமென்று சொன் னார்கள்.

அப்போது அந்தப் பெண்கள் இந்தநோன்பு நோர்க் கிற காலமும் இதன் நன்மையுஞ் சொல்ல வேண்டு மென்று கேட்க இது துலாமாசமாகிய ஐப்பசி மாதம் சுக்கில பட்சம் தசமி தொடங்கி அமரபட்சம் சதுர்த்தசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமாவாசை பரியந்தம் இருபத்தொரு நாள் தினமும் ஸ்நானம் செய்து பரிசுத்தமான வஸ்திரந் தரித்துக் கொண்டு ஈஸ்வரரை ஆலவிருட்சத்தின் கீழே மணலி னாலே லிங்கமாகயமைத்து பூசை செய்து வருகிறதென்று கிரமாய் சொல்லி இது நோற்கிற பேருக்கு சகலபாக் கியமும் பெறுவார்கள். அப்படி இருபத்தொரு நாள் செய்கிறதற்கு நம்மாலே முடியாது ஆகையால் சதுர்த் தசியிலே ஸ்நானஞ் செய்து ஆலவிருட்சத்தின் கீழே மண லினாலே கேதார ஈஸ்வரரை பாவனை செய்து வைத்து பூசை செய்து தூபதீபங் கொடுத்து இருபத்தொரு வெல்ல வுருண்டை இருபத்தொரு சந்தணவுருண்டை இருபத் தொரு மஞ்சளுருண்டை இருபத்தொரு பழம் இருபத் தொரு அதிரசம் இருபத்தொரு பாக்கு இருபத்தொரு வெற்றிலை இருபத்தொருயிழையிலே கயிறு அதிலே இரு பத்தொரு முடி முடிந்து வைத்து நைவேத்தியஞ் செய்து தூபதீபங் கொடுத்து அர்ச்சனை செய்து நமஸ்காரம் செய்து துதி பண்ணினால் அவர்களுக்கு வேண்டிய பாக் கியத்தைக் கொடுப்பார். ஈஸ்வரரென்று சொல்ல, அந்த இரண்டு இராஜ கன்னியர்களும் தெய்வ கன்னியரை வேண்டிக் கொண்டு தங்களிருப்பெல்லாம் சொல்லி எங் களை தேசாதிபதிகள் வந்து கலியாணஞ் செய்யத்தக்க தாகவும் அனுக்கிரகஞ் செய்ய வேண்டுமேயென்று பெண் கள் தெய்வ கன்னிகளை நமஸ்காரஞ் செய்ய அவர்கள் சந்தோசமாய் இந்த நோன்பை நோற்கும்படி டணித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவகையுஞ் சொல்லி அவர்களுக்கு நூலில்லாமல் ஆலம் விழுதை எடுத்து அதிலே இருபத்தொரு முடிமுடிந்து தாங்கள் படைக்கிறதுடனே கூட வைத்துப் படைத்து அந்த நோன்புதோரணத்தைஇவர்கள்கையிலே கொடுத்து இந்தப்படி வருஷாவருஷம் நோன்பு நோற்று வாருங்கள் உங்களுக்கு வேண்டிய பாக்கியம் வரும் கலியாணமும் கைகூடுமென்று வாழ்த்தி ஆசீர்வாதஞ் செய்தனுப்பி தெய்வ கன்னியர்களும் தெய்வலோகம் சென்றார்கள் பிற்பாடு இந்த பெண்கள் இரண்டு பேரும் வீட்டுக்குவரும் போது தங்கள் வீடு மாடமாளிகையாயும் சகல ஐஸ்வரிய முமாயிருக்கக்கண்டு தங்கள் வீடு முன்னேயிருந்தாப் போல இருக்கவில்லையே என்று மயங்கும் போது அவர்கள் தகப்ப னார் முகசாலையிலே வந்து பெண்களை அழைத்துப் போய் அவர்களுக்கு திவ்ய வஸ்திரமும் திவ்வயாபரணமுங் கொடுத்து திவ்யபோஜனமுங் கொடுத்துக் கொண்டு சந் தோசமாயிருக்கும் போது இராஜ கிரியிலேருந்து ஒரு இராஜா வந்து பெண் கேட்டு புண்ணியவதியை சகல ஆடம்பரத்துடனே கலியாணஞ் செய்து கொண்டு போன பிற்பாடு அழகாபுரி பட்டணத்து இராஜ குமாரன் வந்து பாக்கியவதியை சகல ஆடம்பரத்துடனே கலியாணஞ் செய்து அழைத்துக் கொண்டு போனார்கள்.

அவர்களும் இந்த நோன்பு பலத்தினாலே நமக்கு அதிஷ்டம் வந்ததென்று வருஷா வருஷம் நோன்பு அநு சரித்து புத்திர சம்பத்து போகபாக்கியமுமாயிருக்கிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளையிலே பாக்கியவதி யென்கிறவள் தன்னுடைர் அதிஷ்டத்தினாலே நோன்பை மறந்து நோன்பு தோரணத்தை அவரைப்பந்தலின் பேரில் அவிழ்த்துப் போட்டு விட்டாள். அப்படி மறந்து போன படியினாலே மறுமண்டலத்து இராஜ சதுரங்க சேனையுடனே வந்து அழகாபுரிபட்டணத்தைக் கொள்ளையிட்டுபண்டிபண்டார சமஸ்தமும் வாங்கிக் கொண்டான். பாக்கியவதிக்கு தரித்திரம் வந்துபிரவேசித்து சாப்பாடுசாப்பிடுகிறதற்கும் பிரயாசப்பட்டு வாசலிலே அவரைச் செடியிலே மிகுதியாய்க் காய்க்கிற படியால் அந்த அவரைக் காயைப் பறித்து கிருட்சி செய்து கொண்டிருப்பார்கள். பாக்கியவதி யெண்ணாததெல்லாம் யெண்ணி இராஜகிரியிலே தமக்கை வாழுகிறாளென்று பிள்ளையை அழைத்து இராஜகிரியிலே உன்னுடைய பெரிய தாயாரண்டைக்குப் போய் நம்முடைய வர்த்தமானங்களைச் சொல்லி சில திரவியம் வாங்கிவாவென்று வழிக்கு கட்டமுதுங்கட்டிக் கொடுத்தனுப்பினாள்.

அப்படியே அந்தபிள்ளை இராஜகிரிக்குப் போய் தன் பெரிய தாயாரைக் கண்டு த்ங்கள் வர்த்தமானமெல்லாஞ் சொல்ல அவள் தாபந்திரியப்பட்டு பிள்ளையை நாலு நாள் வைத்திருந்து சில வஸ்திரங்களும் ஆபரணமும் சில திரவியம் முடிப்புங் கட்டிக் கொடுத்து கட்டமுதுங்கட்டி அனுப்பினாள் அதை வாங்கிக் கொண்டு சில தூரம் வந்து ஒரு குளக்கரையிலே மூட்டையை வைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக் கட்டமுது சாப்பிடுகிற வேளையிலே மூட்டையை கெருடனெடுத்துக் கொண்டு போய்விட்டது அதுகண்டு மனஸ்தாபப்பட்டு மறுபடியும் பெரியதாய் இடத்திற்கு போய் இந்த சேதியைச் சொன்னான் அப்படியாவென்று மறுபடியும் சில திரவியங்கட்டிக் கொடுத்தனுப்பினாள்.

அதையெடுத்துக் கொண்டு வரும்போது வழியிலே் ஒரு திருடன் வந்து அடித்துப் பறித்துக் கொண்டு போனான். அப்போது துக்கப்பட்டு , பெரியதாயாரண்டைக்கு போய் நாங்கள் பண்ணின பாவமென்னவோ தெரியாது இப்ப கொடுத்த திரவியத்தையும் திருடன் கொண்டு போனானென்று சொல்லக் கேட்டு உங்கள் தாயர் கேதார ஈஸ்வரர் நோன்பு நோற்று வருகிறாளா இல்லையா வென்று கேட்க அந்த நோன்பு இப்போ நோற்கிறதில்லை முன்னே நோற்ற கயிற்றையும் அரைப் பந்தலின் பேரில் போட்டுவிட்டாள் அன்று முதல் இப் படி வந்தாப்போல் காணுதென்றான்.

அப்படியாவென்று ஐப்பசி மாதம் வருந்தனிலும் பிள்ளையை வைத்திருந்து தான் நோற்கிற நோன்புடனே பாக்கியவதிக்கும் ஒரு நோன்பு வைத்து நோற்று அந்த நோன்புக் கயிறும் பலகாரமும் பாக்கு வெற்றிலை மஞ் சளும் இன்னும் சில ஆடையாபரணமும் திரவியமுங் கொடுத்து சில சேவகரையும் கூட்டி இந்த நோன்பை விடாமல் நோற்கச் சொல்லி சில புத்தியுஞ் சொல்லி அனுப்பினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது வழியிலேவரும்போது முன்னேபறித்துப் போனதிருடனும் திரவியத்தையும் கொண்டுவந்துகொடுத் தான் கெருடனும் மூட்டையைப்போட்டு உன் தாய் விர தம் நோற்காமல் விட்டதினாலே இப்படிவந்தது இனிமேல் பயபக்தியுடன் நோன்பு நோற்கச் சொல்லென்று ஒரு சத்தமுண்டாகியது, அது கண்டு இந்தப் பிள்ளை ஆச் சரியப்பட்டு சந்தோஷத்துடன் தன் வீட்டுக்கு வந்து தன் தாயின் கையிலே நோன்பு தோரணமும் பலகாரமும் கொடுத்து தனத்தையுங் கொடுத்து நடந்த விஸ்தாரங் களையும் சொல்ல மெய்தான் என் ஆங்காரத்தினாலே கெட்டேனென்று ஸ்நானம் செய்து கேதார ஸ்வரனை நமஸ்காரஞ் செய்து கயிற்றை வாங்கிக் கட்டிக் கொண் டாள். அந்த நாழிகைக்கே தங்கள் பட்டணத்தை வாங்கிக் கொண்ட இராஜா வந்து தங்கள் பட்டணத்தை யும் தங்கள் பண்டி பண்டாரம் ஆனை சேனையும் ஒப்பு வித்து பகுதியுங் கொடுத்துப் போய்விட்டான்.

அதன்பின் இவர்கள் பழையபடி தங்கள் சீமையை ஆண்டு கொண்டு சகல சாம்பிராச்சியமும் அனுபவித்துக் கொண்டு நோன்பை மறவாமல் செய்து வந்தார்கள்.

**ஆனபடியால் இந்த கேதார ஈஸ் வரர் நோன்பு யாதாமொருவர் தப்பாமல் செய்துவருகிறார்களோ அவர்களெல்லாம் புண்ணியவதி பாக்கியவதியைப் போல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மையிற் பாககியத்தை அனுபவித்து மறுமையில் மோட்சத்தையும் அடைவார்களென்று தரும புத்திர மகாராஜனுக்கு நாரதமா முனிவர் சொல்ல அப்படியே தரும புத்திர மகாராஜாவும் அனுபவித்து சத்துரு ஜெயம் செய்து நாடு நகரமும் பெற்று மோட்சமடைந்தார்கள்.

அருமறை வாழி
யந்தணர் வாழி
யரைரும் வணிகரும் வாழி
பெருநிறை யுழவர் தனத்தனரும்
பெண்களும் வாழியேயிதனை
யிரும்புவீயுள் ளோர் படித்தவர்
கேட்டோரெழுதினோரிப் புராணத்தை
வரும் வடமொழியைத் தென்மொழியு ரைத்த
வணிகனா முருகப்பன் வாழியே.

கேதார ஈஸ்வரர் நோன்புக் கதை முற்றிற்று

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தேவி துணை

ஓம் சக்தி

## கௌரிக்காப்பு

### விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னினன் றருள்செய் ஈலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட் குற்றம் சோர்வுதரும்
எக்குற்றம் வாராமற்கா.

### வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியாரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்த்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழிவாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையை காட்டிடு
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டுவிடு ( வாய்
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியாரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாமிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தாள் வாழ்த்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழு தேமாற்றி
விட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துப்புகள் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்தணிவோருக்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
கும்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் பொழுதெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச்செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலேதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிகு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப்
போற்றிடுவர்

சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறி துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிடாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன் வழிபாடு

1. ஓம் சிவாய நம:
,, மஹேஸ்வராய நம:
,, சம்புவே நம:
,, பிநாகினே நம:

5. ஓம் சசிசேகராய நம;
,, வாமதேவாய நம:
,, விருபாக்ஷாய நம:
,, நீலலோகிதாய நம:
,, சங்கராய நம:

10 ஓம் சூலபாணயே நம:
,, கட்வானே நம:
,, விஷ்ணுவல்லபாய நம:
,, சிபிவிஷ்கடாய நம:
,, அம்பிகா நாதாய நம:

15. ஓம் ஸ்ரீ கண்டாய நம
,, பக்தவக்சலா நம:
,, பவவாய நம:
,, சர்வாய நம:
,, திரிலோகேஹசாய நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. ஓம் சிதிகண்டாய நம:
,, சிவாப்பிரியாய நம:
,, உக்கிராய நம:
,, கபர்த்திநே நம:
,, காமரியே நம:

25 ஓம் அத்தகாசூரசூராய நம:
,, கங்காதராய நம:
,, லலாடஷ்ஷாய நம:
,, காலகாலாய நம:
,, கிருபாநிதயே நம:

30. ஓம் பீமாய நம:
,, பரசு அஸ்ததாய நம:
,, மிருகபாணியே நம:
,, சடாதராய நம:
,, கைலாலை வாசிநே நம:

35. ஓம் கவசிநே நம:
,, கடோராய நம:
,, திரிபுராந்தகாய நம;
,, விரிஷாங்காய நம;
,, விருஷபாரூடாய நம;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40 ஓம் பாஸ்மோ தூளில விக்கிரகாய நம:
,, ஸாமப்பிரியாய நம:
,, ஸர்வம்யாய நம:
,, அநீஸ்பராய நம;
,, ஸாவஞ்ஞாய நம;

45 ஓம் தரஜமூர்த்தியே நம;
,, பரமாத்வநே நம:
,, சோமசூரியாக்கிநீ நீலோகாநாய நம:
,, அவிஷே நம;
,, யக்ஞமயாய நம;

50 ஓம் சோமாய நம;
,, பஞ்சவத்திராய நம;
,, சதாசிவாய நம;
,, விஸ்வேசாய நம;
,, வீரபத்திராய நம;

55 ஓம் கணநாதாய நம;
,, பிரசாபதியே நம:
,, இரணியரேதசே நம;
,, தூர்த்ஜாஷாய நம;
,; கிரிசாய நம;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. ஓம் அநாகாய நம;

,, அரூபாய நம;

,, புஸ்பங்பூஷணாய நம

,, பார்க்காய நம;

,, கிரதத்திவிதே நம;

65. ஓம் கீர்த்திவாசமே நம

,, புராரதையே நம;

,, பிரமதரதிபாய நம;

,, மிரத்தியுஞ்சநய நம;

,, சூட்சமதனுவே நம;

70 ஓம் ஐசுத்யாப்பிலே நம;

,, ஜகத்குருவே நம;

,, வியோமகேசாய நம;

,, மகாஜனந்தராய நம;

,, மகாஜனகரய நம;

ஓம் சாருவிக் ரகாய நம;

,, ருத்திராய நம;

,, பூதயதயே நம;

,, ஸ்தானுவே நம;

,, அகிற்பத்தினியாய நம;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80 ஓம் திகம்பராய நம;
,, அஷ்ட்டமூர்த்தயே நம:
,, அநோகாத்மனே நம;
,, சாத்திவிக்கிரகாய நம:
,, சுத்தவிக்கிரகாய நம;

85 ஓம் சாஸ்வதாய நம:
,, கண்டபிரசவே நம:
,, அஜாய நம:
,, பாசவிமோசகாய நம:
,, ஸாம்பாய நம:

90 ஓம் மிருடாய நம:
,, பசுபதியே நம:
,, தேவாய நம:
,, மகாதேவாய நம;
,, அவவியாய நம:

95 ஓம் அரேய நம:
,, பகநேத்ராதயே நம:
,, தடசத்துவரஹாய நம:
,, ஹரயே நம:
,, அவ்வியததாய நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100 ஓம் சகஸ்ராக்ஷாய நம:

,, சகஸ்திரபதயே நம

,, சவ்வர்க்கபிரதாய நம:

,, அபவர்க்காய நம:

,, சுனந்தாய நம:

105 ஓம் அனந்தகாய நம:

,, தாரகாய நம:

,, பரமேசாய நம:

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சாயி பிறீன்ரேஸ்
பூநாறி மரத்தடி, கே. கே. எஸ் வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதுமலை
மாவத்தை சோதிச்த்திர ஞான வைரவர்
வெளியீடு 4

ஸ்ரீ சாயி அச்சகம்
பூநாறி மரத்தடி, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org